## இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2017

இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகிகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு வருடாந்த அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் வரைபு வருடாந்த அறிக்கையும் 2018 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளமை

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவுகள் என்பன தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 5,807,471,144 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 270,498,973 |
| மொத்த சொத்துக்கள் | 6,077,970,117 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,251,436,202 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 346,043,456 |
| மொத்த பொறுப்புக்கள் | 1,597,479,658 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 4,480,490,459 |
| மொத்த பொறுப்புக்கள் | 6,077,970,117 |
| மொத்த வருமானம் | 540,846,037 |
| மொத்த செலவுகள் | (691,762,857) |
| பற்றாக்குறை | (150,916,820) |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) எரிபொருள் படிகள் மற்றும் வாகன உரிமை படிகளுக்குத் தகைமையற்ற MM சம்பளத் தொகுதியிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியாக ரூபா 182,520 தொகையும் போக்குவரத்து படியாக ரூபா 650,000 தொகையும் நான்கு தோட்ட அத்தியட்சகர்களுக்கு ரூபா 50,000 வீதம் ரூபா 1,150,000 மொத்த தொகையான வாகன படியும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு, செயற்பாட்டு பணிப்பாளருக்கு மற்றும் பொது முகாமையாளர்களுக்கு மாதாந்தம் தகைமையுள்ள எரிபொருள் படி முறையே 170, 150 மற்றும் 120 லீற்றர்களாக இருந்த போதிலும் அந்த வரம்புகளை மிகைத்து 1883 லீற்றர் கூட்டு மொத்தமான எரிபொருள்களுக்காக ரூபா 208,504 மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | செயல் நிமித்த உப கட்டுநிதி பெற்றுக்கொண்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில் 13 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 86,900 கூட்டுமொத்தமான முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்காக 30 நாட்களிலிருந்து 224 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மரங்களை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 2,166,000,000 வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 44,432,300 ஆக இருந்ததுடன் அது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் 2 சதவீதமாகும் அதற்கிணங்க அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்த இலக்குகள் உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கு இலங்கையில் ஒரு ஹெக்டெயருக்கு ஒரு வருடத்திற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பூர்த்தியான தேயிலை விளைச்சல் 1595 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 13 தோட்டங்களில் அந்த விளைச்சல் 94 கிலோ கிராம்களிலிருந்து 786 கிலோகிராமிற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இதற்காக கூட்டுத்தாபனத்தினால் 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான 1478 ஹெக்டெயர் கட்டித் தேயிலைப் பயிர் செய்கையைப் பராமரித்தல் மற்றும் விளைச்சல் கூடிய தண்டுத் தேயிலைப் பயிர்ச் செய்கைக்காக தொடர்ச்சியாக ஈடுபடாமை குறைந்த விளைச்சலைக் பெற்றுக்கொள்வதற்கு தாக்கமளித்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான தேயிலைக் கொழுந்து உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 13 தோட்டங்களில் 11 தோட்டங்களின் தேயிலைக் கொழுந்து உற்பத்தி அதிகரித்துச் செல்கையில் கெலேபொக்க மற்றும் ரங்கல ஆகிய இரண்டு தோட்டங்களில் கொழுந்து உற்பத்தி முறையே 2 சதவீதத்தாலும் மற்றும் 21 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் வருமானம் உழைக்கும் காணியின் அளவு 5048.48 ஹெக்டெயர்களில் 1148 ஹெக்டெயர்கள் வெளித் தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டு மொத்த பூர்த்தியான தேயிலை உற்பத்தி 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் இணைய தளப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 2017 ஆம் ஆண்டிற்கான தேயிலை கைத்தொழிலின் தரவுகளின் பிரகாரம் உரிய காணிகளிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதான வருடாந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட பூர்த்தியான தேயிலை உற்பத்தி 1,833,356 கிலோ கிராம்களாக இருந்தும் வெளி தோட்டக்காரர்களால் அந்த விளைச்சலில் 6 சதவீதமானவை மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேயிலைப் பயிர் செய்கை காணிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக இணைய தளங்களின் மூலம் வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் இலங்கையில் ஒரு கிலோகிராம் தேயிலை உற்பத்திக் கிரயம் ரூபா 467 ஆக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 08 தேயிலைத் தோட்டங்களில் ஒரு கிலோ கிராமின் உற்பத்திக் கிரயம் ரூபா 530 இற்கும் ரூபா 923 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த உற்பத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அந்த ஆண்டிற்கான உற்பத்தி அளவின் பிரகாரம் கட்டுப்படுத்தப்படாமையின் காரணமாக உற்பத்திக் கிரயம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஊ) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்காக இணைய தளத்தின் மூலம் வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் ஒரு கிலோ கிராம் பூர்த்தியான தேயிலையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விற்பனைப் பெறுமதி ரூபா 620 ஆக இருக்க வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் அப் பெறுமதி ரூபா 371 இற்கும் ரூபா 479 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்துகளின் தரத்தின் மட்டத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளை மேம்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை இதற்கு தாக்கமளித்திருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 13 தோட்டங்களுக்குரிய அனைத்து காணிகளதும் பரப்பளவு 9969.46 ஹெக்டெயர்களாக இருந்த போதிலும் அவற்றில் வருமானத்தை உழைப்பதற்காக பங்களிப்புச் செய்துள்ள தேயிலைக் காணிகளின் பரப்பளவு 5048.48 ஹெக்டெயர்களாகும். அதற்கிணங்க கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4920.98 ஹெக்டெயர்களின் மூலம் வருமானம் உழைப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1979 இன் 49 ஆம் இலக்க அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 07(01) A பிரிவின் (i) ஆம் உப பிரிவின் கீழ் அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் இல்லாது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எதுவித நிரந்தர ஆதனங்களையும் குத்தகைக்கு வழங்குதல், விற்பனை செய்தல் அல்லது மூன்றாந்தரப்பினருக்கு கையளிப்புச் செய்யக் கூடாது என்ற போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் 19 காணிகளையும் 03 கட்டிடங்களையும் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் 13 தொலைத் தொடர்பு பரிமாற்று கோபுரங்களுக்காக குத்தகைக்கு வழங்கிய காணிகளில் 04 காணிகளுக்காக 02 அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்தும் 2003 ஆம் ஆண்டிற்காகவும் 2007 ஆம் ஆண்டிலிருந்தும் அறவிட வேண்டிய நிலுவைக் குத்தகைப் பணம் ரூபா 21,474,353 தொகையும் தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளைத் தவிர்த்து குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 14 காணிகளுக்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 34,677,907 ஆக இருந்ததுடன் அதனைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி தன்மையான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக மூலதன மானியமாக வழங்கப்பட்ட ரூபா 73 மில்லியன் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு செலவு செய்வதற்குப் பதிலாக அவற்றில் ரூபா 42,981,358 தொகை 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பசளை இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) கெலேபொக்க தொழிற்சாலைக்காக தேயிலையை உலர்த்தும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து மூன்று சந்தர்ப்பங்களில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இயந்திரங்களுக்காக 2016 சனவரி மாதத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 13,492,500 தொகையான ஆகக் குறைந்த கேள்வி 2018 மார்ச் மாதத்தின் போது ரூபா 26,704,840 ஆக இருந்தது. அதற்கிணங்க இரண்டு வருட காலத்தின் போது இயந்திரங்களினதும் ஏனைய முறைமைகளினதும் விலை அதிகரித்துச் சென்றதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் மேலும் இயந்திரங்களைத் தோற்றுவிப்பதிலுள்ள தாமதித்ததன் காரணமாக உற்பத்தி செய்த தேயிலைகளுக்கு அதிக விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு கூட்டுத்தாபனத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பேர்த் தோட்டத்தில் அமைந்துள்ள வோட்டர் லேன்ட் பகுதியில் காணப்படுகின்ற பங்களாவும் 4.33 ஏக்கரில் காணப்படுகின்ற தென்னைப் பயிர்ச் செய்கையும் வெளித்தரப்பினர்களால் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் உரிய பங்களாவையும் அக்காணியையும் கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்பதற்கோ அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒபல்கல தோட்டத்தை ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு பின்னர் அத் தீர்மானம் மாற்றப்பட்டிருந்தும் 2002 ஆம் ஆண்டின் போது உரிய தனியார் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4.480,000 முற்பணத்தை மீளச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 13 தொழிற்சாலைகளில் நாளாந்தம் 98,500 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்துகளை உற்பத்தி செய்யும் இயலளவுள்ள 10 தொழிற்சாலைகள் தற்பொழுது செயற்பாடற்றுக் காணப்பட்டன. செயற்பாடற்ற சில தொழிற்சாலைகள் தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்யாமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 7,127,842 கிலோகிராம் தேயிலைக் கொழுந்துகளில் 4,011,059 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்துகள் அதாவது 56 சதவீத அளவானவற்றை வெளி கொள்வனவுதாரர்களுக்கு விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 89 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 81 ஆகும். அங்கீகரித்த பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட 15 பதவிகள் வெற்றடமாகக் காணப்பட்டதுடன் மிகையான பதவிணயினர் 7 ஆகும். தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட உடன் அப்பதவி பூரணப்படத்தப்பட வேண்டிய போதிலும் வெற்றிடமாகக் காணப்பட்ட சிரேஸ்ட மட்டத்திலுள்ள 2 பதவிகள் மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள ஒரு பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் மூன்று உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரித்த பதவியணிக்குள் இல்லாத பதவிக்காக 04 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,089,641 பணம் சம்பளங்கள் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தால் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது காணப்பட்ட முகாமையாளர் (நிதி), நிர்வாக உத்தியோகத்தர், உதவி நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் அங்கீகரித்த பதவிகளுக்குள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தில் அப்பதவிகளில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களை அவர்களின் தகமைகளின் அடிப்படையில் பொருத்தமான பதவிகளுக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றிக்கையின் 9.3.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஏதாவது பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் அல்லது பதவியுயர்த்தும் போது அதற்காக நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகமைகள் உள்ளடக்கி அங்கீகரித்த ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை காணப்படுதல் வேண்டும். அவ்வாறு இருந்தும் கூட்டுத்தாபனத்தினால் ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறை இல்லாது மீளாய்வாண்டின் போது 19 பதவியுயர்வுகள் இடம்பெற்றிருந்ததுடன் பதவியுயர்வு வழங்கப்பட்ட பதவிகளுக்குத் தேவையான தகமைகள் உரிய உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்டிருந்ததா என்பதனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(உ) தாபன விதிக்கோவையின் VII ஆவது அத்தியாயத்தின் 10.2 ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்பள ஏற்றங்களைச் செலுத்துதல் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் 10.1 ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்பள ஏற்றத் திகதியில் நிர்ணயிக்கப்பட்ட சம்பள ஏற்றங்கள் உழைத்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தால் எதுவித மதிப்பீடும் செய்யப்படாது 50 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது 02 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான வீச்சுடைய சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ தீர்மானத்தின் காரணமாக மீளாய்வாண்டின் 05 மாதங்களின் போது செலுத்தப்பட்ட மேலதிக சம்பளச் செலவு ரூபா 429,574 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்கள சுற்றிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்ட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | **அவதானிப்பு** |
| --- | --- |
| (அ) பதிவேடுகளைப் பேணுதல் | தொடக்கப் பதிவேடுகள் முறைப்படியாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டு இலக்குகளை அடைந்து கொள்ளல், மேற்பார்வை செய்தல், என்பன கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் செயலாற்றலை மேம்படுத்துவதற்குரிய தொழில்நட்ப கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | அங்கீகரித்த ஆளணிக்கு மேலதிகமாக ஊழியாகளைச் சேர்த்துக்கொள்ளல் சட்டங்கள், விதிகளுக்கு முரணாக பதவியுயர்வுகளையும் சேவை நீடிப்புக்களையும் மேற்கொள்ளுதல் மற்றும் ஊழியர்களுக்கு முறைப்படியாக பொறுப்புக்களையும் கடமைகளையும் ஒப்படைக்காமை. |
| (ஈ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் எதிர்பாாக்கப்பட்டவாறு அமுல்ப்படுத்தப்படாமை. |